©
GOVERNMENT OF TAMIL NADU
2017

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 8.80 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

**சிறப்பு வெளியீடு** ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 18A] சென்னை, திங்கட்கிழமை, ஜனவரி 30, 2017
தை 17, துன்முகி, திருவள்ளுவர் ஆண்டு-2048

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

**பொருளடக்கம்**

| சட்டமுன்வடிவுகள் :— | பக்கங்கள் |
|---|---|
| எண் 2/2017—தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் .. .. .. | 2-4 |
| எண் 3/2017—தமிழ்நாடு நகராட்சிய சட்டங்கள் (திருத்தச்) சட்டம் .. .. | 5-10 |
| எண் 4/2017—சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டம் .. .. .. | 11-14 |
| எண் 5/2017—தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டு (திருத்தம்) சட்டம் .. .. .. | 15-20 |
| எண் 6/2017—தமிழ்நாடு பாரம்பரிய ஆணைய (திருத்தச்) சட்டம் .. .. .. | 21-22 |

2017–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 30–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2017.**

**1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபத்து எட்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலத்தின் சட்டமன்றப்பேரவையினால் பின்வருமாறு சட்டம் இயற்றப்படுவதாகுக.–

**பகுதி–I**

**முன்னுரை**

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் என்று அழைக்கப்பெறும்.

(2) இது, 2016 ஆம் ஆண்டு அக்டோபர் 17 ஆம் நாள் முதல் நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

261--A எனும் புதிய பிரிவு புகுத்தப்படுதல்.

2. 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 261 எனும் பிரிவிற்குப் பின்பு, பின்வரும் பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:– தமிழ்நாடு சட்டம் 21/1994

**261–A தனி அலுவலர்களை அமர்த்துதல்,–**இந்தச் சட்டத்தில் அல்லது அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதிலும் என்ன அடங்கியிருந்த போதிலும் எது எவ்வாறிருப்பினும், அரசு, அறிவிக்கையின் வாயிலாக 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் தொடங்கிய தேதிக்குப் பின்பு கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் அல்லது நேர்வுக்கேற்ப மாவட்ட ஊராட்சிகளுக்கான சாதாரண தேர்தலுக்குப் பின்னர் நடைபெறும் முதல் கூட்டம் நடக்கும் வரை அல்லது 2017ஆம் ஆண்டு ஜீன் 30ஆம் நாள் வரை, இதில் எது முந்தியதோ அதுவரை கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் அல்லது நேர்வுக்கேற்ப மாவட்ட ஊராட்சிகளின் அதிகாரங்களை செயலுறுத்துவதற்கு மற்றும் செயல் பணிகளைச் செய்து முடிப்பதற்கு தனி அலுவலர்களை அமர்த்தம் செய்யலாம்.

நீக்கறவு மற்றும் காப்பு.

3. (1) 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தம்) அவசரச் சட்டம் மற்றும் 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தம்) அவசரச் சட்டம் ஈங்கிதனால் நீக்கறவு செய்யப்படுகின்றன. தமிழ்நாடு அவசரச் சட்டம் 1/2016. தமிழ்நாடு அவசரச் சட்டம் 3/2016.

(2) அத்தகைய நீக்கறவு எவ்வாறிருப்பினும், மேற்சொன்ன அவசரச் சட்டங்களால் திருத்தப்பட்டவாறு 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்படி செய்யப்பட்ட அல்லது எடுக்கப்பட்ட செயல் எதுவும், மேற்சொன்ன அவசர சட்டத்தால் திருத்தம் செய்யப்பட்டவாறு இந்த சட்டத்தால் திருத்தம் செய்யப்பட்டவாறு முறையே இந்த சட்டத்தின்படி செய்யப்பட்டு இருப்பதாக அல்லது எடுக்கப்பட்டு இருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும். தமிழ்நாடு சட்டம் 21/1994.

**நோக்க—காரண விளக்கவுரை**

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம், கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகள் ஆகியவற்றின் வார்டு உறுப்பினர்கள் மற்றும் கிராம ஊராட்சிகளின் தலைவர்களின் பதவிகளில் உள்ள சாதாரணமான காலியிடங்களை நிரப்பும் நோக்கத்திற்காக அறிவிக்கை வெளியிட்டது. இதற்கிடையில் மேற்சொன்ன அறிவிக்கையை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிப் பேராணை மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. சென்னை உயர்நீதிமன்றம் நீதிப்பேராணை மனு எண் 33984/2016 மற்றும் பல்வகை நீதிப் பேராணை எண்கள் 29329 மற்றும் 29330/2016இல், சென்னை உயர்நீதிமன்றம் 04.10.2016 தேதியிட்ட அதனுடைய ஆணையில், மற்றவற்றுக்கிடையில், 2016ஆம் ஆண்டு டிசம்பர் 31—க்கு முன்னதாக தேர்தலை நடத்தவும் மற்றும் அத்தேர்தல் பணியை செய்து முடிப்பதற்கு புதிய அறிவிக்கையை வெளியிடுமாறு தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்திற்கு அறிவுறுத்தியிருக்கிறது. மேலும், தற்பொழுது உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பிரதிநிதிகளின் பதவிக் காலம் விரைவில் முடிவடையவுள்ளதாலும் அவற்றை ஐந்தாண்டு காலத்திற்கு மேல் நீட்டிக்க முடியாது என்பதாலும் தேர்தல் நடத்தப்படுகின்றவரை உள்ளாட்சி அமைப்புகளுக்கு தனி அலுவலர்களை அமர்த்தம் செய்யுமாறு அரசுக்கு அறிவுறுத்தியிருக்கிறது. சென்னை உயர்நீதிமன்றத்தின் மேற்கண்ட அறிவுறுத்தல்களின் அடிப்படையில் கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் அதிகாரங்களை செயலுறுத்துவதற்கு மற்றும் செயற்பணிகளை செய்து முடிப்பதற்கு 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 21 / 1994), 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) அவசரச் சட்டத்தால் (தமிழ்நாடு அவசரச் சட்ட எண் 1/2016) திருத்தம் செய்யப்பட்டது. மேற்சொன்ன தமிழ்நாடு அவசரச்சட்டம் 1/2016 தொடங்கிய தேதிக்குப் பிறகு மேற்சொன்ன ஊராட்சிகளுக்கு சாதாரண தேர்தல் நடைபெற்று ஊராட்சிகளின் முதற்கூட்டம் நடைபெறும் நாள்வரை அல்லது 2016ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் தேதி வரை இதில் எது முந்தியதோ அதுவரை மேற்கண்ட 1/2016 தமிழ்நாடு அவசரச்சட்டத்திற்கிணங்க கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளை நிர்வகிப்பதற்கு தனி அலுவலர்கள் அமர்த்தம் செய்யப்பட்டனர்.

2. 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (தேர்தல்) விதிகளின் 14ஆம் விதியின்படி ஊராட்சி வாக்களர் பட்டியலுக்கு தமிழ்நாடு சட்டமன்றப்பேரவையின் வாக்காளர் பட்டியல் அடிப்படையாக இருக்கின்றது. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கான வாக்காளர் பட்டியலின் சிறப்பு சுருக்க சீராய்வு 2017ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் மட்டுமே இந்திய தேர்தல் ஆணையத்திடமிருந்து பெறக்கூடியதாக இருக்கும். சட்டமன்றப் பேரவையின் வாக்காளர் பட்டியல்கள் பெறப்பட்டதன் பேரில், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம், சாதாரணமான தேர்தல்களை நடத்தும் நோக்கத்திற்காக இறுதி வாக்காளர் பட்டியலை வெளியிட இயலும். 2017 ஆம் ஆண்டு மார்ச் 2ஆம் நாள் மற்றும் 2017ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்கிடையில் பள்ளி மாணவர்களுக்கான ஆண்டு இறுதித் தேர்வு HSC (12ஆம் வகுப்பு) மற்றும் SSLC (10ஆம் வகுப்பு) உள்ளடங்கலாக நடைபெறும் என்றும் பெரும்பாலான வாக்குப்பதிவு அலுவலர்கள் பள்ளிக்கல்வி துறையின் தேர்வு பணியினை பார்த்துக் கொண்டிருப்பர் என்றும் அதன் காரணமாக அவர்களை ஊரக உள்ளாட்சி அமைப்புக்கான தேர்தல்களை நடத்துவதற்காக தேர்தல் பணிகளுக்காக அமர்த்த முடியாது மற்றும் மிகப் பெரும்பாலான பள்ளிக்கட்டடங்கள் வாக்குச்சாவடியாகப் பயன்படுத்தப்படுகின்றன என்பதாலும் அவைகள் ஆண்டுத் தேர்வுக்குப் பிறகு மற்றும் 2017ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும் பணி முடிவடைந்த பின்னரே கிடைக்கக் கூடியதாக இருக்கும் என்றும் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் தெரிவித்திருக்கிறது. எனவே, தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் 2016ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் தேதியன்று தனி அலுவலர்களின் பதவிக்காலம் முடிவுறுவதை கருத்தில் கொண்டு ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் அலுவல்களை நிர்வகிப்பதற்காக பொருத்தமான ஏற்பாடுகளைச் செய்வதற்கு அரசு உரிய நடவடிக்கையை எடுக்கலாம் என்று கேட்டுக் கொண்டது. ஆகையால், 2017ஆம் ஆண்டு ஜீன் 30ஆம் தேதிவரை ஆறு மாதங்கள் மேலுமான கால அளவு ஒன்றிற்கு 2016ஆம் ஆண்டு டிசம்பர் 31—க்கு அப்பால் தனி அலுவலர்களின் பதவிக் காலத்தை நீட்டிப்பதென அரசு முடிவு செய்திருக்கிறது. அதன்படி, தனி அலுவலர்களுக்கான பதவி காலத்தை மேலும் ஆறு மாத காலத்திற்கு 2017ஆம் ஆண்டு ஜீன் 30ஆம் தேதி வரையோ அல்லது கிராம ஊராட்சிகள்,

ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் சாதாரண தேர்தல் நடந்த பின்னர் கூடும் முதற்கூட்டம் நடைபெறும் வரை இவற்றில் எது முந்தியதோ அதுவரை நீட்டிப்பு செய்ய வேண்டி 2016ஆம் ஆண்டு டிசம்பர் 27ஆம் நாளன்று 2016ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தம்) அவசரச்சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் 3/2016) ஆளுநர் பிறப்பித்திருக்கின்றார். அதன்படி, தனி அலுவலர்களின் பதவிக் காலத்தை நீட்டிப்பதற்கான ஆணை 2016ஆம் ஆண்டு டிசம்பர் 30ஆம் நாளன்று ***தமிழ்நாடு அரசு சிறப்பிதழில்*** வெளியிடப்பட்டது.

3. இந்தச்சட்ட முன்வடிவு மேற்சொன்ன அவசரசட்டங்களை மாற்றி அமைக்க விழைகிறது.

**எஸ்.பி. வேலுமணி,**
*நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும்*
*சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்.*

அ.மு.பி. ஜமாலுதீன்,
*செயலாளர்.*

2017–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 30–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2017.**

**தமிழ்நாடு மாநிலத்தில் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் தொடர்பான சட்டங்களை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபத்து எட்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலத்தின் சட்டமன்றப் பேரவையினால் சட்டமாக இயற்றப்படுவதாகுக:–

**பகுதி – I**

**முன்னுரை**

1. (1) இந்தச் சட்டம், 2017–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிய சட்டங்கள் (திருத்தச்) சட்டம் என்று அழைக்கப்பெறும். குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

(2) இது, 2016–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 17 ஆம் நாள் முதல் நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

**பகுதி – II**

**1919 –ஆம் ஆண்டு சென்னை நகர மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.**

தமிழ்நாடு சட்டம் IV/1919.

2. 1919–ஆம் ஆண்டு சென்னை நகர மாநகராட்சிச் சட்டத்தின் 414–A எனும் பிரிவுக்குப் பின்பு, பின்வரும் பிரிவு புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:– 414-B எனும் புதிய பிரிவு புகுத்தப்படுதல்.

**414–B. தனி அலுவலர் அமர்த்தம்.–** இந்தச் சட்டத்தில் அல்லது தற்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதிலும் அடங்கியிருப்பது எது எவ்வாறிருப்பினும், மாநில அரசு, அறிவிக்கையின் வாயிலாக 2017–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிய சட்டங்கள் (திருத்தச்)சட்டம் தொடங்கிய தேதிக்குப் பின்பு மாநகராட்சிக்குரிய சாதாரண தேர்தலுக்குப் பின்னர் நடைபெறும் முதல் மன்றக் கூட்டம் நடக்கும் வரை அல்லது 2017–ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் நாள் வரை, இதில் எது முந்தியதோ அதுவரை, மாநகராட்சியின் அதிகாரங்களை செயலுறுத்துவதற்கு மற்றும் செயல் பணிகளைச் செய்து முடிப்பதற்கு ஒரு தனி அலுவலரை அமர்த்தம் செய்யலாம்.

**பகுதி – III**

**1920 –ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்திற்கான திருத்தம்.**

தமிழ்நாடு சட்டம் V/1920.

3. 1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் 375–A எனும் பிரிவுக்குப் பின்பு, பின்வரும் பிரிவு புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:– 375–B எனும் புதிய பிரிவு புகுத்தப்படுதல்.

**375–B. தனி அலுவலர் அமர்த்தம்.–** இந்தச் சட்டத்தில் அல்லது தற்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதிலும் அடங்கியிருப்பது எது எவ்வாறிருப்பினும், மாநில அரசு, அறிவிக்கையின் வாயிலாக 2017–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிய சட்டங்கள் (திருத்தச்) சட்டம் தொடங்கிய தேதிக்குப் பின்பு நகராட்சிகள் அல்லது நேர்வுக்கேற்ப பேரூராட்சிகளுக்கான சாதாரண தேர்தலுக்குப் பின்னர் நடைபெறும் முதல் மன்றக் கூட்டம் நடக்கும் வரை அல்லது 2017–ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் நாள் வரை, இதில் எது முந்தியதோ அதுவரை, நகராட்சிகளின் அல்லது நேர்வுக்கேற்ப பேரூராட்சிகளின் அதிகாரங்களை செயலுறுத்துவதற்கு மற்றும் செயல் பணிகளைச் செய்து முடிப்பதற்கு ஒரு தனி அலுவலரை அமர்த்தம் செய்யலாம்.

**பகுதி – IV**

**1971 –ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.**

தமிழ்நாடு சட்டம் 15/1971.

4. 1971 –ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் 510-AA பிரிவுக்குப் பின்பு, பின்வரும் பிரிவு புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:– 510-AAA எனும் புதிய பிரிவு புகுத்தப்படுதல்.

**510-AAA. தனி அலுவலர் அமர்த்தம்.–** இந்தச் சட்டத்தில் அல்லது தற்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதிலும் அடங்கியிருப்பது எது எவ்வாறிருப்பினும், அரசு, அறிவிக்கையின் வாயிலாக 2017–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிய சட்டங்கள் (திருத்தச்) சட்டம் தொடங்கிய தேதிக்குப் பின்பு மாநகராட்சிக்குரிய சாதாரண தேர்தலுக்குப் பின்னர் நடைபெறும் முதல் மன்றக் கூட்டம் நடக்கும் வரை அல்லது 2017–ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் நாள் வரை, இதில் எது முந்தியதோ அதுவரை, மாநகராட்சியின் அதிகாரங்களை செயலுறுத்துவதற்கு மற்றும் செயல் பணிகளைச் செய்து முடிப்பதற்கு ஒரு தனி அலுவலரை அமர்த்தம் செய்யலாம்.

**பகுதி – V**

**1981 –ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.**

511–AAA எனும் புதிய பிரிவு புகுத்தப்படுதல்.

5. 1981–ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் 511–AA எனும் பிரிவுக்குப் பின்பு, பின்வரும் பிரிவு புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:– தமிழ்நாடு சட்டம் 25/1981.

**511–AAA. தனி அலுவலர் அமர்த்தம்.–** இந்தச் சட்டத்தில் அல்லது தற்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதிலும் அடங்கியிருப்பது எது எவ்வாறிருப்பினும், அரசு, அறிவிக்கையின் வாயிலாக 2017–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிய சட்டங்கள் (திருத்தச்) சட்டம் தொடங்கிய தேதிக்குப் பின்பு மாநகராட்சிக்குரிய சாதாரண தேர்தலுக்குப் பின்னர் நடைபெறும் முதல் மன்றக் கூட்டம் நடக்கும் வரை அல்லது 2017–ஆம் ஆண்டு ஜுன் 30 ஆம் நாள் வரை, இதில் எது முந்தியதோ அதுவரை, மாநகராட்சியின் அதிகாரங்களை செயலுறுத்துவதற்கு மற்றும் செயல் பணிகளைச் செய்து முடிப்பதற்கு ஒரு தனி அலுவலரை அமர்த்தம் செய்யலாம்.

**பகுதி – VI**

**1994 –ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.**

10-A எனும் புதிய பிரிவு புகுத்தப்படுதல்.

6. 1994–ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சிச் சட்டத்தின் 10–ஆம் பிரிவுக்குப் பின்பு, பின்வரும் பிரிவு புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:– தமிழ்நாடு சட்டம் 27/1994.

**10–A. தனி அலுவலர் அமர்த்தம்.–** இந்தச் சட்டத்தில் அல்லது தற்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதிலும் அடங்கியிருப்பது எது எவ்வாறிருப்பினும், அரசு, அறிவிக்கையின் வாயிலாக 2017–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிய சட்டங்கள் (திருத்தச்) சட்டம் தொடங்கிய தேதிக்குப் பின்பு மாநகராட்சிக்குரிய சாதாரண தேர்தலுக்குப் பின்னர் நடைபெறும் முதல் மன்றக் கூட்டம் நடக்கும் வரை அல்லது 2017–ஆம் ஆண்டு ஜுன் 30 ஆம் நாள் வரை, இதில் எது முந்தியதோ அதுவரை, மாநகராட்சியின் அதிகாரங்களை செயலுறுத்துவதற்கு மற்றும் செயல் பணிகளைச் செய்து முடிப்பதற்கு ஒரு தனி அலுவலரை அமர்த்தம் செய்யலாம்.

**பகுதி – VII**

**1994 –ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.**

10-A எனும் புதிய பிரிவு புகுத்தப்படுதல்.

7. 1994–ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சிச் சட்டத்தின் 10–ஆம் பிரிவுக்குப் பின்பு, பின்வரும் பிரிவு புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:– தமிழ்நாடு சட்டம் 28/1994.

**10–A. தனி அலுவலர் அமர்த்தம்.–** இந்தச் சட்டத்தில் அல்லது தற்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதிலும் அடங்கியிருப்பது எது எவ்வாறிருப்பினும், அரசு, அறிவிக்கையின் வாயிலாக 2017–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிய சட்டங்கள் (திருத்தச்) சட்டம் தொடங்கிய தேதிக்குப் பின்பு மாநகராட்சிக்குரிய சாதாரண தேர்தலுக்குப் பின்னர் நடைபெறும் முதல் மன்றக் கூட்டம் நடக்கும் வரை அல்லது 2017–ஆம் ஆண்டு ஜுன் 30 ஆம் நாள் வரை, இதில் எது முந்தியதோ அதுவரை, மாநகராட்சியின் அதிகாரங்களை செயலுறுத்துவதற்கு மற்றும் செயல் பணிகளைச் செய்து முடிப்பதற்கு ஒரு தனி அலுவலரை அமர்த்தம் செய்யலாம்.

**பகுதி – VIII**

**1994–ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.**

10–A எனும் புதிய பிரிவு புகுத்தப்படுதல்.

8. 1994–ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சிச் சட்டத்தின் 10 ஆம் பிரிவுக்குப் பின்பு, பின்வரும் பிரிவு புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:– தமிழ்நாடு சட்டம் 29/1994.

**10-A. தனி அலுவலர் அமர்த்தம்.–** இந்தச் சட்டத்தில் அல்லது தற்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதிலும் அடங்கியிருப்பது எது எவ்வாறிருப்பினும், அரசு, அறிவிக்கையின் வாயிலாக 2017–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிய சட்டங்கள் (திருத்தச்) சட்டம் தொடங்கிய தேதிக்குப் பின்பு மாநகராட்சிக்குரிய சாதாரண தேர்தலுக்குப் பின்னர் நடைபெறும் முதல் மன்றக் கூட்டம் நடக்கும் வரை அல்லது 2017–ஆம் ஆண்டு ஜுன் 30 ஆம் நாள் வரை, இதில் எது முந்தியதோ அதுவரை, மாநகராட்சியின் அதிகாரங்களை செயலுறுத்துவதற்கு மற்றும் செயல் பணிகளைச் செய்து முடிப்பதற்கு ஒரு தனி அலுவலரை அமர்த்தம் செய்யலாம்.

**பகுதி–IX**

**2008– ஆம் ஆண்டு திருப்பூர் மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.**

9. 2008–ஆம் ஆண்டு திருப்பூர் மாநகராட்சிச் சட்டத்தின் 9–ஆம் பிரிவுக்குப் பின்பு பின்வரும் பிரிவு, புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

9–A எனும் பிரிவு புகுத்தப்படுதல்.

தமிழ்நாடு சட்டம் 7/2008.

**9-A. தனி அலுவலர் அமர்த்தம்.–** இந்தச் சட்டத்தில் அல்லது தற்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதிலும் அடங்கியிருப்பது எது எவ்வாறிருப்பினும், அரசு, அறிவிக்கையின் வாயிலாக 2017–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிய சட்டங்கள் (திருத்தச்) சட்டம் தொடங்கிய தேதிக்குப் பின்பு மாநகராட்சிக்குரிய சாதாரண தேர்தலுக்குப் பின்னர் நடைபெறும்

முதல் மன்றக் கூட்டம் நடக்கும் வரை அல்லது 2017–ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் நாள் வரை, இதில் எது முந்தியதோ அதுவரை, மாநகராட்சியின் அதிகாரங்களை செயலுறுத்துவதற்கு மற்றும் செயல் பணிகளைச் செய்து முடிப்பதற்கு ஒரு தனி அலுவலரை அமர்த்தம் செய்யலாம்.

**பகுதி – X**

**2008–ஆம் ஆண்டு ஈரோடு மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.**

தமிழ்நாடு சட்டம் 8/2008.

10. 2008–ஆம் ஆண்டு ஈரோடு மாநகராட்சிச் சட்டத்தின் 9–ஆம் பிரிவுக்குப் பின்பு, பின்வரும் பிரிவு புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:– 9-A எனும் பிரிவு புகுத்தப்படுதல்.

**9–A. தனி அலுவலர் அமர்த்தம்.–** இந்தச் சட்டத்தில் அல்லது தற்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதிலும் அடங்கியிருப்பது எது எவ்வாறிருப்பினும், அரசு, அறிவிக்கையின் வாயிலாக 2017–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிய சட்டங்கள் (திருத்தச்) சட்டம் தொடங்கிய தேதிக்குப் பின்பு மாநகராட்சிக்குரிய சாதாரண தேர்தலுக்குப் பின்னர் நடைபெறும் முதல் மன்றக் கூட்டம் நடக்கும் வரை அல்லது 2017–ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் நாள் வரை, இதில் எது முந்தியதோ அதுவரை, மாநகராட்சியின் அதிகாரங்களை செயலுறுத்துவதற்கு மற்றும் செயல் பணிகளைச் செய்து முடிப்பதற்கு ஒரு தனி அலுவலரை அமர்த்தம் செய்யலாம்.

பகுதி – **XI**

**2008 –ஆம் ஆண்டு வேலூர் மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.**

தமிழ்நாடு சட்டம் 26/2008.

11. 2008–ஆம் ஆண்டு வேலூர் மாநகராட்சிச் சட்டத்தின் 9–ஆம் பிரிவுக்குப் பின்பு, பின்வரும் பிரிவு புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:– 9–A எனும் புதிய பிரிவு புகுத்தப்படுதல்.

**9–A. தனி அலுவலர் அமர்த்தம்.–** இந்தச் சட்டத்தில் அல்லது தற்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதிலும் அடங்கியிருப்பது எது எவ்வாறிருப்பினும், அரசு, அறிவிக்கையின் வாயிலாக 2017–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிய சட்டங்கள் (திருத்தச்) சட்டம் தொடங்கிய தேதிக்குப் பின்பு மாநகராட்சிக்குரிய சாதாரண தேர்தலுக்குப் பின்னர் நடைபெறும் முதல் மன்றக் கூட்டம் நடக்கும் வரை அல்லது 2017–ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் நாள் வரை, இதில் எது முந்தியதோ அதுவரை, மாநகராட்சியின் அதிகாரங்களை செயலுறுத்துவதற்கு மற்றும் செயல் பணிகளைச் செய்து முடிப்பதற்கு ஒரு தனி அலுவலரை அமர்த்தம் செய்யலாம்.

**பகுதி – XII**

**2008–ஆம் ஆண்டு தூத்துக்குடி மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.**

தமிழ்நாடு சட்டம் 27/2008.

12. 2008–ஆம் ஆண்டு தூத்துக்குடி மாநகராட்சிச் சட்டத்தின் 9–ஆம் பிரிவுக்குப் பின்பு, பின்வரும் பிரிவு புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:– 9–A எனும் புதிய பிரிவு புகுத்தப்படுதல்.

**9–A. தனி அலுவலர் அமர்த்தம்.–** இந்தச் சட்டத்தில் அல்லது தற்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதிலும் அடங்கியிருப்பது எது எவ்வாறிருப்பினும், அரசு, அறிவிக்கையின் வாயிலாக 2017–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிய சட்டங்கள் (திருத்தச்) சட்டம் தொடங்கிய தேதிக்குப் பின்பு மாநகராட்சிக்குரிய சாதாரண தேர்தலுக்குப் பின்னர் நடைபெறும் முதல் மன்றக் கூட்டம் நடக்கும் வரை அல்லது 2017–ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் நாள் வரை, இதில் எது முந்தியதோ அதுவரை, மாநகராட்சியின் அதிகாரங்களை செயலுறுத்துவதற்கு மற்றும் செயல் பணிகளைச் செய்து முடிப்பதற்கு ஒரு தனி அலுவலரை அமர்த்தம் செய்யலாம்.

**பகுதி – XIII**

**2013 –ஆம் ஆண்டு தஞ்சாவூர் மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.**

தமிழ்நாடு சட்டம் 24/2013.

13. 2013–ஆம் ஆண்டு தஞ்சாவூர் மாநகராட்சிச் சட்டத்தின் 9–ஆம் பிரிவுக்குப் பின்பு, பின்வரும் பிரிவு புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:– 9-A எனும் புதிய பிரிவு புகுத்தப்படுதல்.

**9–A. தனி அலுவலர் அமர்த்தம்.–** இந்தச் சட்டத்தில் அல்லது தற்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதிலும் அடங்கியிருப்பது எது எவ்வாறிருப்பினும், அரசு, அறிவிக்கையின் வாயிலாக 2017–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிய சட்டங்கள் (திருத்தச்) சட்டம் தொடங்கிய தேதிக்குப் பின்பு மாநகராட்சிக்குரிய சாதாரண தேர்தலுக்குப் பின்னர் நடைபெறும் முதல் மன்றக் கூட்டம் நடக்கும் வரை அல்லது 2017–ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் நாள் வரை, இதில் எது முந்தியதோ அதுவரை, மாநகராட்சியின் அதிகாரங்களை செயலுறுத்துவதற்கு மற்றும் செயல் பணிகளைச் செய்து முடிப்பதற்கு ஒரு தனி அலுவலரை அமர்த்தம் செய்யலாம்.

## பகுதி – XIV

### 2013–ஆம் ஆண்டு திண்டுக்கல் மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.

9-A எனும் புதிய பிரிவு புகுத்தப்படுதல்.

14. 2013–ஆம் ஆண்டு திண்டுக்கல் மாநகராட்சிச் சட்டத்தின் 9–ஆம் பிரிவுக்குப் பின்பு, பின்வரும் பிரிவு புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:– தமிழ்நாடு சட்டம் 25/2013.

**9–A. தனி அலுவலர் அமர்த்தம்.–** இந்தச் சட்டத்தில் அல்லது தற்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதிலும் அடங்கியிருப்பது எது எவ்வாறிருப்பினும், அரசு, அறிவிக்கையின் வாயிலாக 2017–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிய சட்டங்கள் (திருத்தச்) சட்டம் தொடங்கிய தேதிக்குப் பின்பு மாநகராட்சிக்குரிய சாதாரண தேர்தலுக்குப் பின்னர் நடைபெறும் முதல் மன்றக் கூட்டம் நடக்கும் வரை அல்லது 2017–ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் நாள் வரை, இதில் எது முந்தியதோ அதுவரை, மாநகராட்சியின் அதிகாரங்களை செயலுறுத்துவதற்கு மற்றும் செயல் பணிகளைச் செய்து முடிப்பதற்கு ஒரு தனி அலுவலரை அமர்த்தம் செய்யலாம்.

நீக்கறவு மற்றும் காப்புரை.

15. (1) 2016–ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (மூன்றாம் திருத்தம்) அவசரச் சட்டம் மற்றும் 2016–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (நான்காம் திருத்தம்) அவசரச் சட்டம் ஆகியவை ஈங்கிதனால் நீக்கறவு செய்யப்பட்டது. தமிழ்நாடு அவசரச்சட்டம் 2/2016.

(2) அத்தகைய நீக்கறவு எவ்வாறிருப்பினும், 1919–ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டம், 1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1971–ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டம், 1981–ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டம், 1994–ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சிச் சட்டம், 1994–ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சிச் சட்டம், 1994–ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சிச் சட்டம், 2008–ஆம் ஆண்டு திருப்பூர் மாநகராட்சிச் சட்டம், 2008–ஆம் ஆண்டு ஈரோடு மாநகராட்சிச் சட்டம், 2008–ஆம் ஆண்டு வேலூர் மாநகராட்சிச் சட்டம், 2008–ஆம் ஆண்டு தூத்துக்குடி மாநகராட்சிச் சட்டம், 2013–ஆம் ஆண்டு தஞ்சாவூர் மாநகராட்சிச் சட்டம் மற்றும் 2013–ஆம் ஆண்டு திண்டுக்கல் மாநகராட்சிச் சட்டம் ஆகியவற்றிலுள்ளபடி செய்யப்பட்ட அல்லது எடுக்கப்பட்ட செயல் எதுவும் மேற்சொன்ன அவசரச் சட்டத்தால் திருத்தம் செய்யப்பட்டவாறு இந்தச் சட்டத்தால் திருத்தம் செய்யப்பட்டவாறு முறையே இந்தச் சட்டங்களின்படி செய்யப்பட்டதாக அல்லது எடுக்கப்பட்டதாக கொள்ளப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு அவசரச்சட்டம் 4/2016.
தமிழ்நாடு சட்டம் IV/1919.
தமிழ்நாடு சட்டம் V/1920.
தமிழ்நாடு சட்டம் 15/1971.
தமிழ்நாடு சட்டம் 25/1981.
தமிழ்நாடு சட்டம் 27/1994.
தமிழ்நாடு சட்டம் 28/1994.
தமிழ்நாடு சட்டம் 29/1994.
தமிழ்நாடு சட்டம் 7/2008.
தமிழ்நாடு சட்டம் 8/2008.
தமிழ்நாடு சட்டம் 26/2008.
தமிழ்நாடு சட்டம் 27/2008.
தமிழ்நாடு சட்டம் 24/2013.
தமிழ்நாடு சட்டம் 25/2013.

**நோக்கக்–காரண விளக்கவுரை**

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம், பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளின் சிற்றொகுதி உறுப்பினர்கள்/மன்ற உறுப்பினர்களின் பதவிகளில் சாதாரணமாக உள்ள காலியிடங்களை நிரப்பும் நோக்கத்திற்காக அறிவிக்கை பிறப்பித்திருக்கிறது. இதற்கிடையில், மேற்சொன்ன அறிவிக்கையை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிப் பேராணை மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. சென்னை உயர்நீதிமன்றம் நீதிப் பேராணை மனு எண் 33984/2016 மற்றும் பல்வகை நீதிப் பேராணை எண்கள் 29329 மற்றும் 29330/2016–ல், சென்னை உயர்நீதிமன்றம் 04.10.2016 தேதியிட்ட அதனுடைய ஆணையில், மற்றவற்றுக்கு இடையில், 2016 ஆம் ஆண்டு டிசம்பர் 31 க்கு முன்னதாக தேர்தலை நடத்தவும் மற்றும் அத்தேர்தல் பணியை செய்து முடிப்பதற்காக புதிய அறிவிக்கையை பிறப்பிக்குமாறு தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்திற்கு அறிவுறுத்தியிருக்கிறது. மேலும், தற்போது உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பிரதிநிதிகளின் பதவிக் காலம் விரைவில் முடிவடையவுள்ளதாலும் அவற்றை ஐந்தாண்டு காலத்திற்கு மேல் நீட்டிக்க முடியாது என்பதாலும் தேர்தல்கள் நடத்தப்படுகின்றவரை உள்ளாட்சி அமைப்புகளுக்கு தனி அலுவலர்களை அமர்த்தம் செய்யுமாறு அரசுக்கு அறிவுறுத்தியிருக்கிறது. சென்னை உயர்நீதிமன்றத்தின் மேற்கண்ட அறிவுறுத்தல்களின் அடிப்படையில் நகராட்சி நிர்வாக ஆணையர், பேரூராட்சிகளின் இயக்குநர் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஆகியோர் முறையே மாநில மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலர்களாக இருப்பதால் சாதாரண தேர்தல்களுக்குப் பின்பு மன்றங்களை அமைக்கும்வரை பேரூராட்சிகளை, நகராட்சிகளை மற்றும் மாநகராட்சிகளை நிர்வகிப்பதற்கு தனி அலுவலர்களை அமர்த்தம் செய்யுமாறு அரசை கேட்டுக் கொண்டிருந்தனர். சென்னை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பினை கருத்தில் கொண்டு, பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளுக்கான தேர்தல் நடத்தும் வரையோ அல்லது 2016 ஆம் ஆண்டு டிசம்பர் 31ம் தேதி வரையோ, இதில் எது முந்தியதோ அதுவரை மேற்சொன்ன பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் அதன் அதிகாரங்களை செலுத்துவதற்கும், பணிகளை மேற்கொள்வதற்கும் ஏதுவாக தனி அலுவலர்களை அமர்த்தம் செய்ய வேண்டி பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் தொடர்புடைய சட்டங்களை 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிய சட்டங்கள் (மூன்றாவது திருத்தம்) அவசரச் சட்டத்தால் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 2/2016) திருத்தம் செய்யப்பட்டது. மேற்சொன்ன அவசரச் சட்டத்திற்கு இணங்க பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளை நிர்வகிப்பதற்கு தனி அலுவலர்கள் அமர்த்தப்பட்டனர்.

2. பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் ஆகியவற்றுடன் தொடர்புடைய சட்டங்களின்படி, பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளின் வாக்காளர் பட்டியல்கள், பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளை பொறுத்து அப்போதைக்கு நடைமுறையில் உள்ள சட்டத்தின் வகையங்களுக்கு இணங்க தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்காக தயாரிக்கப்பட்ட மற்றும் திருத்தம் பெற்ற வாக்காளர் பட்டியலும் ஒரே மாதிரியதானதாக இருத்தல் வேண்டும். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கான வாக்காளர் பட்டியலின் சிறப்பு சுருக்க சீராய்வு 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் மட்டுமே இந்திய தேர்தல் ஆணையத்திடமிருந்து பெறக்கூடியதாக இருக்கும். சட்டமன்றப் பேரவையின் வாக்காளர் பட்டியல்கள் பெறப்பட்டதன் பேரில், தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம், சாதாரண தேர்தல்களை நடத்தும் நோக்கத்திற்காக இறுதி வாக்காளர் பட்டியலை வெளியிட இயலும். 2017ஆம் ஆண்டு மார்ச் 2 ஆம் நாள் மற்றும் 2017 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்கு இடையில் HSC (12 ஆம் வகுப்பு) மற்றும் SSLC (10 ஆம் வகுப்பு) மாணவர்களுக்கான ஆண்டு இறுதித்தேர்வு நடைபெறும் என்றும் பெரும்பாலான வாக்கு பதிவு அலுவலர்கள் பள்ளி கல்வி துறையின் தேர்வு பணியை பார்த்துக் கொண்டிருப்பர் என்றும் ஆகையால் அவர்களை உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்களை நடத்துவதற்காக தேர்தல் பணியில் அமர்த்த முடியாது என்றும் மற்றும் மிகப்பெரும்பாலான பள்ளி வளாகங்கள் வாக்குச்சாவடியாகப் பயன்படுத்தப்படுகின்றன என்பதாலும் அவைகள் ஆண்டுத் தேர்வுக்குப் பிறகு 2017 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் விடைதாள்களை மதிப்பீடு செய்யும் பணி முடிவடைந்த பின்னரே கிடைக்கக்கூடியதாக இருக்கும் என்றும் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் தெரிவித்திருக்கிறது. எனவே, தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம், 2016 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதியன்று தனி அலுவலர்களின் பதவிக்காலம் முடிவுறுவதை கருத்தில் கொண்டு நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் அலுவல்களை நிர்வகிப்பதற்காக பொருத்தமான ஏற்பாடுகளைச் செய்வதற்கு அரசு உரிய நடவடிக்கையை எடுக்கலாம் என்று கேட்டுக் கொண்டது. மேலும், நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநர் முறையே நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளின் மாநில தேர்தல் அலுவலராகவும் மற்றும் சென்னை மாநகராட்சி ஆணையர், சென்னை மாநகராட்சி வரம்பிற்குட்பட்ட பகுதிகளுக்கு மாவட்ட தேர்தல் ஆணையராகவும் இருக்கும் அவர்களும் இதே கருத்தை தெரிவித்துள்ளதுடன் 2016 ஆம் ஆண்டு டிசம்பர் 31–க்கு முன்னர் தேர்தல்களை நடத்த முடியாது என்பதால் தனி அலுவலர்களின் பதவிக்காலத்தை 2016 ஆம் ஆண்டு டிசம்பர் 31–க்கு அப்பால் ஆறு மாத கால அளவிற்கு 2017 ஆம் ஆண்டு ஜூன் 30 வரை நீட்டிக்கப்படலாம் என்றும் தெரிவித்திருந்தனர். ஆகையால், 2017 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் தேதி வரையில் ஆறு மாதங்கள் மேலுமான கால அளவிற்காக 2016 ஆம் ஆண்டு டிசம்பர் 31–க்கு அப்பால் தனி அலுவலர்களின் பதவிக்காலத்தை நீட்டிப்பதற்கு அரசு முடிவு செய்துள்ளது.

3. அதன்படி தனி அலுவலர்களுக்கான பதவிக்காலத்தை மேலும் ஆறு மாத காலத்திற்கு 2017 ஆம் ஆண்டு ஜூன் 30 வரையோ அல்லது பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும்

மாநகராட்சிகளுக்கான சாதாரண தேர்தல் நடந்த பின்னர் கூடும் முதல் மன்ற கூட்டம் நடைபெறும் வரையிலோ இதில் எது முந்தியதோ அதுவரை நீட்டிப்பு செய்ய வேண்டி தமிழ்நாடு நகராட்சிய சட்டங்கள் (நான்காவது திருத்தம்) அவசரச் சட்டம், 2016 (தமிழ்நாடு அவசரச் சட்டம் 4/2016)—னை ஆளுநர் பிறப்பித்துள்ளார்.

4. இந்தச்சட்ட முன்வடிவு மேற்சொன்ன அவசரச்சட்டங்களை மாற்றி அமைக்க விழைகிறது.

**எஸ். பி. வேலுமணி,**
*நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி,*
*சிறப்புத் திட்டங்கள் செயலாக்கம்*
*துறை அமைச்சர்.*

அ.மு.பி. ஜமாலுதீன்,
*செயலாளர்.*

2017—ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 30—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130—ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/2017.**

**1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்ட முன்வடிவு.**

இந்தியக்குடியரசின் அறுபத்து எட்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலத்தின் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச்சட்டம், 2017-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

2. 1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்திற்குரிய ஏழாம் அட்டவணையில்,—

ஏழாம் அட்டவணைக்கான திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் IV / 1919.

(1) 191 ஆம் பிரிவிற்கு தொடர்பான இனத்திற்காக பின்வரும் இனம் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

"191 பிரதான பணி அமைப்புகளுடன் அனுமதியின்றி செய்யப்படும் இணைப்பிற்கு —

(a) <u>**சாதாரணக் கட்டடம்**</u>—

| | | |
|---|---|---|
| (i) | குடியிருப்பிற்கு | ஐந்தாயிரம் ரூபாய்; |
| (ii) | வணிக நோக்கத்தில் உள்ளவற்றிற்கு | பத்தாயிரம் ரூபாய்; |

(b) <u>**சிறப்புக் கட்டடம்**</u>—

| | | |
|---|---|---|
| (i) | குடியிருப்பிற்கு | இருபத்தி ஐந்தாயிரம் ரூபாய்; |
| (ii) | வணிக நோக்கத்தில் உள்ளவற்றிற்கு | ஐம்பதாயிரம் ரூபாய்; |

(c) <u>**பல அடுக்குமாடிக் கட்டடம்**</u>—

| | | |
|---|---|---|
| (i) | குடியிருப்பிற்கு | ஒரு இலட்சம் ரூபாய்; |
| (ii) | வணிக நோக்கத்தில் உள்ளவற்றிற்கு | இரண்டு இலட்சம் ரூபாய். |

<u>**விளக்கம்.**</u>—இந்த இனத்தின் நோக்கத்திற்காக, சாதாரணக் கட்டடம், சிறப்புக் கட்டடம் மற்றும் பல அடுக்குமாடிக் கட்டடம் ஆகியவை முறையே அவற்றிற்கு சென்னை பெருநகர பரப்பிடத்திற்கான மேம்பாட்டு ஒழுங்குமுறையில் குறித்தளிக்கப்பட்டுள்ள அதே பொருளைக் கொண்டிருக்கும்.'';

(2) 202 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவிற்கு தொடர்பான இனத்திற்காக பின்வரும் இனம் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

"202 (5) தெருக்களில் கழிவுநீரை விடுவதற்கு—

(a) <u>**சாதாரணக் கட்டடம்**</u>—

| | | |
|---|---|---|
| (i) | குடியிருப்பிற்கு | ஐந்தாயிரம் ரூபாய்; |
| (ii) | வணிக நோக்கத்தில் உள்ளவற்றிற்கு | பத்தாயிரம் ரூபாய்; |

(b) **<u>சிறப்புக் கட்டடம்</u>**—

| | | |
|---|---|---|
| (i) | குடியிருப்பிற்கு | இருபத்தி ஐந்தாயிரம் ரூபாய்; |
| (ii) | வணிக நோக்கத்தில் உள்ளவற்றிற்கு | ஐம்பதாயிரம் ரூபாய்; |

(c) **<u>பல அடுக்குமாடிக் கட்டடம்</u>**—

| | | |
|---|---|---|
| (i) | குடியிருப்பிற்கு | ஒரு இலட்சம் ரூபாய்; |
| (ii) | வணிக நோக்கத்தில் உள்ளவற்றிற்கு | இரண்டு இலட்சம் ரூபாய். |

**<u>விளக்கம்</u>.**—இந்த இனத்தின் நோக்கத்திற்காக, சாதாரணக் கட்டடம், சிறப்புக் கட்டடம் மற்றும் பல அடுக்குமாடிக் கட்டடம் ஆகியவை முறையே அவற்றிற்கு சென்னை பெருநகர பரப்பிடத்திற்கான மேம்பாட்டு ஒழுங்குமுறையில் குறித்தளிக்கப்பட்டுள்ள அதே பொருளைக் கொண்டிருக்கும்.''.

**நோக்க – காரண விளக்கவுரை.**

**1919**–ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் IV/1919), **191** ஆம் பிரிவு, ஆணையரின் அனுமதியின்றி மாநகர கம்பிவடம், ஒயர், குழாய், வடிகால் அல்லது கால்வாய் ஆகிய எதனுடனும் இணைப்பு எதனையும் செய்வதை தடை செய்கிறது மற்றும் கூறப்பட்ட சட்டத்தின் **202 (5)** ஆம் பிரிவு மற்றவற்றிற்கிடையில் வளாகங்கள் எதனின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் எவராலும் தெருக்களில் கழிவுநீர் விடப்படுவதை தடைசெய்கிறது. கூறப்பட்ட சட்டத்தின் ஏழாம் அட்டவணை, **191** மற்றும் **202 (5)** ஆகிய பிரிவுகள் உள்ளடங்களாக கூறப்பட்ட சட்டத்தின் வகைமுறைகளை மீறுகின்றவற்றிற்கு தண்டத் தொகைகளை குறிப்பிடுகிறது. மேற்சொன்ன வகைமுறைகள் மீறலை திறம்பட தடுக்கும்பொருட்டு, அரசு, கூறப்பட்ட **191** மற்றும் **202(5)** ஆகிய பிரிவுகளின் வகைமுறைகளை மீறுகின்றவற்றிற்கான தண்டத் தொகைகளை அதிகப்படுத்துவதென முடிவு செய்துள்ளது. அதற்கிணங்க, இந்நோக்கத்திற்காக மேற்சொன்ன தமிழ்நாடு சட்டம் IV/1919–ற்குரிய மேற்சொன்ன ஏழாவது அட்டவணையை பொருந்தத்தக்க வகையில் திருத்தம் செய்வதென முடிவு செய்திருக்கிறது.

2. இந்தச் சட்ட முன்வடிவு மேற்சொன்ன முடிவிற்கு செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

**எஸ்.பி. வேலுமணி,**
*நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி,*
*சிறப்புத் திட்டங்கள் செயலாக்கம் துறை அமைச்சர்.*

அ.மு.பி. ஜமாலுதீன்,
*செயலாளர்.*

2017—ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 30—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130—ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/2017.**

**1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டுச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்ட முன்வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபத்து எட்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

**1.** (1) இந்தச் சட்டம் 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டு (திருத்தம்) சட்டம் என்று வழங்கப்பெறும். குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

(2) இது மாநில அரசால் அறிவிக்கையின் வாயிலாக குறித்திடலாகும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் XIV/1955. **2.** (இதன் பின்பு முதன்மைச் சட்டம் என குறிப்பிடப்படுவதான) 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டுச் சட்டத்தின் 7-ஆம் பிரிவிற்குப் பதிலாக பின்வரும் பிரிவு மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும் அதாவது:- 7 ஆம் பிரிவிற்கான மாற்றாக்கம்.

**“7.சந்தை மதிப்பு நிச்சயிக்கப்படுதல்,-**

(1) பிறவாறு வகை செய்யப்பட்டவாறின்றி, சொத்து எதனின் சந்தை மதிப்பின் பேரில் இந்தச் சட்டத்தின் அடிப்படையில் செலுத்தத்தக்க கட்டணமாக இருக்கின்றவிடத்து அத்தகைய மதிப்பு வாதுரை அளிக்கப்பட்ட தேதியன்று இருந்தவாறு நிச்சயிக்கப்படுதல் வேண்டும்.

**விளக்கம்-** இந்தப் பிரிவின் நோக்கத்திற்காக “சந்தை மதிப்பு” என்பது, 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரை வரிச் சட்டம் (மையச் சட்டம் 11/1899)-இன் 47-AA பிரிவின்படி சந்தை மதிப்பு நிர்ணயிக்கப்படுவது என்று பொருள்படும்:

**வரம்புரை**: ஆனால் வாதி சந்தையின் மதிப்பை விட குறைவாக அசையா சொத்தின் மதிப்பை மதிப்பீடு செய்கின்றவிடத்தான நேர்வுகளில், அந்த சொத்தின் உண்மையான சந்தை மதிப்பை குறிப்பிடாமல் இருந்ததற்காக 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரை வரிச் சட்டத்தின் (மையச் சட்ட எண் II/1899) 47 AA பிரிவின்படி ஏன் சந்தை மதிப்பு நிர்ணயிக்கப்படக் கூடாது என்பது குறித்து கேட்கப்படும் கேள்விகளுக்கான போதுமான காரணங்களை அவர் அளிக்க வேண்டும்.

(2) வாதியால் செய்யப்பட்ட மதிப்பீட்டு உரிமை வழக்கு எண்ணிடப்படும் ஆரம்பநிலையில், வழக்கிற்கான பிற தரப்பினரால் எழுப்பப்படலாகும் மறுப்புரைக்குட்பட்டு நீதிமன்றத்தினால் ஏற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும்.’’

**3.** முதன்மைச் சட்டத்தின் 21-A எனும் பிரிவிற்குப் பதிலாக பின்வரும் பிரிவு சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:- 21—A எனும் பிரிவிற்கான மாற்றாக்கம்.

**“21-A- கட்டணம் அடுத்துள்ள ரூபாய்க்கு என்கின்ற முறையில் கணக்கிடப்பட வேண்டும்.—** இந்தச் சட்டத்தின்படி செலுத்தத்தக்க கட்டணத் தொகையினை நிச்சயித்தல் மற்றும் கணக்கிடுகையில் ரூபாயின் பின்னம் எதுவும் ஒரு ரூபாயாக என்று கணக்கிடப்பட வேண்டும்.”

**4.** முதன்மைச் சட்டத்தின் 25-ஆம் பிரிவில்,- 25—ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) (a) எனும் கூறில் “ஓர் ஆயிரத்து ஐநூறு” என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக “ஐயாயிரம் ரூபாய்” என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்,

(2) (b) எனும் கூறில் “ஓர் ஆயிரம் ரூபாய்” என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக “ஐயாயிரம் ரூபாய்” என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்,

**(3)** (c) எனும் கூறில் "இரண்டாயிரம் ரூபாய்" என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக "ஐயாயிரம் ரூபாய்" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்,

**(4)** (c) எனும் கூறுக்குப் பின்பு, பின்வரும் கூறு புகுத்தப்படுதல் வேண்டும். அதாவது:-

"(cc) எதிரான உரிமைக்கான எதிர்வாதம் ஒன்று செய்யப்பட்டு இருக்கின்றவிடத்து, அதனை எதிரிடை கோரிக்கையாக கொள்ளப்படுதல் வேண்டும் மற்றும் அசையாச் சொத்தின் சந்தை மதிப்பின் பேரில் கட்டணம் கணக்கிடப்படுதல் வேண்டும்".

**(5)** (d) எனும் கூறில் "ஓர் ஆயிரம் ரூபாய்" என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக "ஐயாயிரம் ரூபாய்" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

30–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**5.** முதன்மைச் சட்டத்தின் **30** ஆம் பிரிவில்,

(1) "ஓர் ஆயிரம் ரூபாய்" என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக "ஐயாயிரம் ரூபாய்" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

(2) பின்வரும் வரம்புரை சேர்க்கப்படுதல் வேண்டும். அதாவது:-

**வரம்புரை**: ஆனால், எதிரான உரிமைக்கான ஒன்றாக எதிர்வாதம் செய்யப்பட்டு இருக்கின்றவிடத்தான நேர்வுகளில் அதனை எதிரிடை கோரிக்கையாக கொள்ளப்படுவதுடன் கட்டணம் அசையா சொத்தின் சந்தை மதிப்பின் பேரில் கணக்கிடப்படுதல் வேண்டும்.

37–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**6.** முதன்மைச் சட்டத்தின் **37** ஆம் பிரிவில் **(2)** ஆம் உட்பிரிவிற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவு அமைக்கப்படுதல் வேண்டும். அதாவது:-

"(2) வாதி ஒருவரால் பாகப் பிரிவினை மற்றும் கூட்டுக்குடும்ப சொத்தின் தனி அனுபோக உடைமை அல்லது கூட்டாகவுள்ள அல்லது பொதுவாக உள்ள சொந்த சொத்திற்கான உரிமை வழக்கொன்றில் நபர் அத்தகைய சொத்தின் கூட்டு அனுபோக உடைமையைக் கொண்டவாறாக இருக்கிறாரென்றால் கட்டணம் பின்வரும் விகிதங்களில் செலுத்தப்படுதல் வேண்டும்:-

வாதுரை–

| | |
|---|---|
| (i) உயர்நீதிமன்றத்திற்கு அளிக்கப்பட்டிருக்கும் போது: | பத்தாயிரம் ரூபாய். |
| (ii) உயர்நீதிமன்றம் தவிர பிற நீதிமன்றங்களாக இருக்கும் பொழுது. | ஐயாயிரம் ரூபாய்." |

53–A எனும் புதிய பிரிவு புகுத்தப்படுதல்.

**7.** முதன்மைச் சட்டத்தின் **53** ஆம் பிரிவிற்குப் பின்பு பின்வரும் பிரிவு புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:-

**"53–A. உரிமை வழக்குகளை மாற்றுவதற்கான மேல்முறையீட்டின் பேரிலான கட்டணம்.-**

(1) மாற்றப்பட்ட உரிமை வழக்குகளுக்கான மேல்முறையீட்டின் பேரில் செலுத்துகின்ற கட்டணமானது உரிமை வழக்கின் பேரில் செலுத்தப்பட்ட அல்லது செலுத்தப்பட வேண்டிய கட்டணமானது இருக்கின்றவற்றில் எது குறைவோ அந்தக் கட்டணமானது செலுத்தத்தக்க கட்டணமாக இருக்க வேண்டும்.

**(2)** உரிமையியல் நீதிமன்றத்திற்குரிய அதனுடைய முதலேற்பு அதிகாரவரம்பிற்குள் உயர்நீதி மன்றத்திலிருந்து மாற்றப்பட்ட உரிமை வழக்குகளுக்கான மேல்முறையீடுகளுக்குச் செலுத்தத்தக்க கட்டணம் உயர்நீதி மன்றத்தில் செலுத்தப்படும் கட்டணமாக இருத்தல் வேண்டும். மேல்முறையீட்டின் பேரிலான கட்டணம் உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கிற உண்மையான வாதுரைக்கு இருந்தாற் போன்ற செலுத்தத்தக்க அதிகப்படியான கட்டணத்தின் அடிப்படையில் கணக்கிடப்படலாகாது".

69–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**8.** முதன்மைச் சட்டத்தின் **69** ஆம் பிரிவில் "பாதித்தொகை" என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக "முழுத்தொகை" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

**9.** முதன்மைச் சட்டத்தின் 69-A எனும் பிரிவிற்குப் பதிலாக பின்வரும் பிரிவு அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது,- 69-A எனும் பிரிவிற்கான மாற்றாக்கம்.

**“69–A உரிமையியல் நடைமுறை தொகுப்புச் சட்டத்தின் 89 ஆம் பிரிவின்படி பூசல்களுக்கான தீர்வின் பேரிலான திருப்பிக் கொடுத்தல்,-** 1908 ஆம் ஆண்டு உரிமையியல் நடைமுறை தொகுப்புச் சட்டத்தின் (மையச்சட்டம் V/1906) 89 ஆம் பிரிவில் சுட்டப்பட்டுள்ள பூசலுக்கான தீர்வின் முறைகள் எதற்குமான உரிமை வழக்கிற்கான தரப்பினர்களாக நீதிமன்றம் சுட்டுகிறவிடத்து, செலுத்தப்பட்ட கட்டணம் அத்தகைய சுட்டுகையின் பேரில் திருப்பிக் கொடுக்கப்படுதல் வேண்டும். அத்தகைய திருப்பிக் கொடுக்கப்படுதல் என்பது, பூசலுக்கான தீர்வுக்காக காத்திருத்தலாகாது.”

**10.** முதன்மைச் சட்டத்தின் 74 ஆம் பிரிவுக்குப் பின்பு பின்வரும் பிரிவு புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:- 74-A எனும் புதிய பிரிவு புகுத்தப்படுதல்.

**“74–A கட்டாயச் செலவுகள்,-** அற்பமான அல்லது யூகத்தின் அடிப்படையிலான பிரச்சனையில் நீதிமன்றம் வெற்றி பெறும் தரப்பினருக்கு செலவு தொகையினை வழங்க வேண்டும், அது, உள்ளபடியான செலவு தொகையாகவும் அல்லது வெற்றி பெற்ற தரப்பினரால் செலுத்தப்பட்ட நீதிமன்ற கட்டணத்தின் மதிப்பிற்கு நிகரானதாகவும் இருக்கக்கூடியவற்றில் எது குறைவானதாக இருக்கின்றதோ அதுவாக இருக்க வேண்டும்.”

**11.** முதன்மைச் சட்டத்தின் I-ஆம் இணைப்புப்பட்டியலில்,- இணைப்புப் பட்டியல் I-ஐத் திருத்தம் செய்தல்.

(1) 1 ஆம் உறுப்பில் (1) ஆம் பத்திக்கு எதிராக (2) மற்றும் (3) ஆகிய பத்திகளில் உள்ள பதிவுகளுக்குப் பதிலாக, பின்வரும் பதிவுகள் முறையே, மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:-

| | |
|---|---|
| “நீதிமன்றம் எதிலும் முன்னிடப்படும் ஈடுசெய் அல்லது எதிரிடைக்கோரிக்கை அல்லது மேல்முறையீட்டு உரை ஒன்றை வாதுரை செய்யும் வழக்குரை அல்லது எழுத்து வழி வாக்குமூலம். | பூசலில் உள்ள உறுபொருளின் தொகை அல்லது மதிப்பில் மூன்று விழுக்காடு.” |

(2) 6ஆம் உறுப்பில் (1) ஆம் பத்திக்கு எதிராக (2) மற்றும் (3) ஆகிய பத்திகளில் உள்ள பதிவுகளுக்குப் பதிலாக, பின்வரும் பதிவுகள், முறையே, மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:-

| | |
|---|---|
| “உயில் இணக்கப்பட்டோ அல்லது இணைக்கப்படாமலோ உயில் ஒன்றின் மெய்ப்பிப்புச் சான்று அல்லது ஆட்சி உரிமை ஆவணம் | இருபத்தைந்தாயிரம் ரூபாய் என்ற மேல்வரை ஒன்றுக்கு உட்பட்டு எந்த உடைமைக்கான மெய்ப்பிப்புச் சான்றோ ஆட்சி உரிமை ஆவணமோ வழங்கப்படுகிறதோ, அந்த உடைமைக்கான தொகை அல்லது மதிப்பு மீது மூன்று விழுக்காடு.” |

**12.** முதன்மைச் சட்டத்தின் II –ஆம் இணைப்புப் பட்டியலில்,–(1) 3 ஆம் உறுப்பில் (1) ஆம் பத்திக்கு எதிராக (2) மற்றும் (3) ஆகிய பத்திகளில் உள்ள பதிவுகளுக்குப் பதிலாக, பின்வரும் பதிவுகள் முறையே, மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:- 11–ஆம் இணைப்புப் பட்டியலைத் திருத்தம் செய்தல்.

“1908 ஆம் ஆண்டு உரிமையியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டத்தின் 144 ஆம் பிரிவின்படியான பிரச்சினை எதனையும் தீர்மானிக்கும் ஆணையையும் உள்ளடக்கிய ஒரு ஆணையின் மேல் மேல்முறையீட்டு கோரிக்கை மனு அளிக்கப்பட்டிருக்கும் போது,–

| | |
|---|---|
| (i) உயர் நீதிமன்றம் அல்லாத பிற நீதிமன்றம் எதிலும் அல்லது அரசிடம் அல்லது அரசு அல்லாத பிற நிருவாக அலுவலரிடம் அல்லது 1980 ஆம் ஆண்டு தமிழ்நாடு வருவாய் வாரியம் ஒழிப்புச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படியான அறிவிக்கையில் குறித்து வைக்கப்பட்டுள்ள உரிய அதிகார அமைப்பிடம் அல்லது தலைமை நிருவாக அதிகாரியிடம் முன்னிடப்படும் போது பிறவாறாக வகை செய்யப்பட்டிராதபோது, | நூறு ரூபாய் |
| (ii) உயர்நீதிமன்றத்தில் | இரண்டாயிரம் ரூபாய்'' |

(2) 4 ஆம் உறுப்பில் (1) ஆம் பத்திக்கு எதிராக (2) மற்றும் (3) ஆகிய பத்திகளில் உள்ள பதிவுகளுக்குப் பதிலாக, பின்வரும் பதிவுகள், முறையே, பதிலாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:-

| | |
|---|---|
| ''1996 ஆம் ஆண்டு பொதுவர் தீர்ப்பு மற்றும் சமரசம் சட்டத்தின்படி பொதுவர் தீர்வத்தை நீக்கம் செய்வதற்காகவும் அயல்நாட்டு தீர்வத்தை செயல்படுத்துவதற்காகவுமான விண்ணப்பம்" | ஒரு லட்சம் ரூபாய் மேல்வரைக்கு உட்பட்டு அதிகாரவரம்பிற்கான மதிப்பில் மூன்று விழுக்காடு. |

(3) 11 ஆம் உறுப்பில்,-

(i) (3) ஆம் பத்தியில், (2) ஆம் பத்தியில் அதன் (g) என்ற இனத்திற்கு எதிராக உள்ள "இரண்டு ரூபாய்" என்ற பதிவிற்குப் பதிலாக, "இருபது ரூபாய்" என்ற பதிவு, மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii) (2) ஆம் பத்தியில் உள்ள (h) மற்றும் (i) என்ற இனங்களுக்கும் மற்றும் (3) ஆம் பத்தியில் அதற்குத் தொடர்புள்ள பதிவுகளிலும், பின்வருவன பதிலாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:-

| | |
|---|---|
| ''(h) தீர்ப்புக்கு முன்பு கைது செய்வதற்கான அல்லது பற்றுகை செய்வதற்கான அல்லது தற்காலிக உறுத்துக்கட்டளைக்கான விண்ணப்பம் நீதிமன்றம் எதிலும் முன்னிடும் போது | இருபது ரூபாய் |
| (i) நீதிமன்றம் எதிலும் முன்னிடப்படும் 1908 ஆம் ஆண்டு உரிமையியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டத்தின் 47 ஆம் பிரிவு மற்றும் ஆணை XXI விதிகள் 58 மற்றும் 90 ஆகியவற்றின்படியான விண்ணப்பம் அல்லது மனு | இருபது ரூபாய்'' |

(iii). (3) ஆம் பத்தியில், அதன் (2) ஆம் பத்தியில் உள்ள (m) என்ற இனத்திற்கு எதிராக உள்ள, "ஐயாயிரம் ரூபாய் மேல்வரை ஒன்றுக்கு உட்பட்டு உறுபொருளின் மதிப்பில் ஒரு விழுக்காடு" என்ற பதிவுக்குப் பதிலாக, "ஒரு லட்சம் ரூபாய் மேல்வரை ஒன்றுக்கு உட்பட்டு உறுபொருளின் மதிப்பில் மூன்று விழுக்காடு" என்ற பதிவு மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(iv).(2) ஆம் பத்தியில் (o) என்ற இனத்திற்கும் மற்றும் (3) ஆம் பத்தியில் அது தொடர்பான பதிவுகளுக்கும் பதிலாக, பின்வருவன மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:-

| | |
|---|---|
| "(o) உரிமைவழக்கு அல்லது நடவடிக்கை எதிலுமிருந்தும் எழும், 1908 ஆம் ஆண்டு உரிமையியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டத்தின் 115 ஆம் பிரிவின்படியோ 1887 ஆம் ஆண்டு மாகாண சிறு வழக்கு நீதிமன்றங்கள் சட்டத்தின் 25 ஆம் | இருநூறு ரூபாய்." |

பிரிவின்படியோ பிற சட்டம் எதனின் வகைமுறைகளின்படியோ உயர் நீதிமன்றத்தில் முன்னிடப்படும் சீராய்வு மனு.

(v).(2) ஆம் பத்தியில் உள்ள (p) என்ற இனத்திற்கும் மற்றும் (3) ஆம் பத்தியில் அதற்குத் தொடர்புடைய பதிவுகளுக்கும் பின்வருவன மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:-

| | |
|---|---|
| "(p )மாவட்ட நீதிமன்றம் ஒன்றில் அளிக்கப்படும் சீராய்வு மனு | இருநூறு ரூபாய்." |

(vi) (2) ஆம் பத்தியில் உள்ள (r) என்ற இனத்திற்கும் மற்றும் (3) ஆம் பத்தியில் அதற்குத் தொடர்புடைய பதிவுகளுக்கும், பின்வருவன மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:-

| | |
|---|---|
| "(r) (i) ஆட்கொணர்வு எனும் நீதிப்பேராணை அல்லாத நீதிப்பேராணை ஒன்றுக்காக அரசமைப்பின் 226 ஆம் உறுப்பின்படி உயர் நீதிமன்றத்தில் முன்னிடப்படும் மனு | ஆயிரம் ரூபாய் |
| (ii) அரசமைப்பின் 227 ஆம் உறுப்பின்படி உயர் நீதிமன்றத்தில் முன்னிடப்படும் மனு. | ஐநூறு ரூபாய்." |

(vii) (3) ஆம் பத்தியில் உள்ள, அதன் (2) ஆம் பத்தியில் (s) என்ற இனத்திற்கு எதிராக உள்ள "பத்து ரூபாய்" என்ற பதிவிற்காக, "இருபது ரூபாய்" என்ற பதிவு மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(4) 16 ஆம் உறுப்பின் (1) ஆம் பத்திக்கு எதிராக (2) மற்றும் (3) ஆகிய பத்திகளில் உள்ள பதிவுகளுக்காக, பின்வரும் பதிவுகள், மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:-

| | |
|---|---|
| "வழக்குரைஞர் ஒருவர் தாம் ஒரு தரப்பினருக்காக அமர்த்தப்பட்டிருப்பதைக் குறித்துக்காட்டி அல்லது தெரிவித்து கையொப்பமிடப்படும் முக்தர்நாமா, வக்காளத்நாமா அல்லது ஆவணம் எதுவும் நீதிமன்றம் எதிலும் முன்னிடப்படும்பொழுது | பத்து ரூபாய்." |

(5) 18ஆம் உறுப்பின் (1) ஆம் பத்திக்கு எதிராக (2) மற்றும் (3) ஆகிய பத்திகளில் உள்ள பதிவுகளுக்குப் பதிலாக, பின்வரும் பதிவுகள், முறையே, மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:-

| | |
|---|---|
| "முன்னெச்சரிப்பு (கேவியட்) | இருபது ரூபாய்." |

(6) 19 ஆம் உறுப்பின் (1) ஆம் பத்திக்கு எதிராக (2) மற்றும் (3) ஆகிய பத்திகளில் உள்ள பதிவுகளுக்குப் பதிலாக பின்வரும் பதிவுகள், முறையே, மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:-

| | |
|---|---|
| "உயர்நீதிமன்றம் உள்ளடங்கலாக குற்றவியல் நீதிமன்றங்களில் முன்னிலையாதல் குறிப்புரை ஒவ்வொன்றுக்காகவும் | பத்து ரூபாய்." |

(7) 20 ஆம் உறுப்பின் (1) ஆம் பத்திக்கு எதிராக (3) ஆம் பத்தியில், "ஆயிரம் ரூபாய் மேல்வரை ஒன்றுக்கு உட்பட்டு ஒவ்வோர் ஐம்பதாயிரம் ரூபாய்க்கும் இருபத்தைந்து ரூபாய்" என்ற பதிவுக்குப் பதிலாக, "பத்தாயிரம் ரூபாய் மேல்வரை ஒன்றுக்கு உட்பட்டு பெறுமானத்தில் (advalorem) பாதி" என்ற பதிவு மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

**<u>நோக்கக் காரண விளக்கவுரை</u>**

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மற்றவற்றை உள்ளடக்கியுள்ள W.P.No.31249/2014 என்கின்ற வழக்கில் **28.11.2014** – ஆம் தேதியிட்ட அதனுடைய ஆணையின்படி நீதிமன்ற கட்டணங்களின் அமைப்பை செம்மைப்படுத்துதல் பற்றி ஆலோசிப்பதற்காக ஓய்வுபெற்ற நீதிபதி மாண்புமிகு திரு.K.சம்பத் அவர்களின் தலைமையின் கீழ் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அந்தக் குழு **1955**-ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டு சட்டத்தில் உள்ள (தமிழ்நாடு சட்டம் XIV/1955) முரண்பாடுகளைச் சுட்டிக்காட்டியுள்ளது மற்றும் மேற்சொன்ன XIV/1955 தமிழ்நாடு சட்டத்திற்கு திருத்தங்கள் கொண்டு வர வேண்டும் என்கின்ற வகையில் அதனுடைய ஆலோசனைகளின் அடிப்படையில் அதனுடைய பரிந்துரைகளுடன் உயர்நீதிமன்றத்திற்கு அதனுடைய அறிக்கையை சமர்ப்பித்துள்ளது. மாண்புமிகு உயர்நீதிமன்றம், குழுவின் பரிந்துரைகளின் பேரில் தேவையான ஆணைகளைப் பிறப்பிக்குமாறு அரசுக்கு அறிவுறுத்தியிருக்கிறது. மேற்சொன்ன குழுவின் பரிந்துரைகளின் பேரில், அரசு, மேற்சொன்ன XIV/1955 தமிழ்நாடு சட்டத்திற்கு தேவையான திருத்தங்களைக் கொண்டு வருவதென முடிவு செய்திருக்கிறது.

**2.** இச்சட்ட முன்வடிவு மேற்சொன்ன முடிவிற்கு செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

**சி.வி. சண்முகம்,**
*சட்டம், நீதிமன்றங்கள் மற்றும்*
*சிறைச்சாலைகள் துறை அமைச்சர்.*

அ.மு.பி. ஜமாலுதீன்,
*செயலாளர்.*

2017–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 30–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2017.**

## 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு பாரம்பரிய ஆணையச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்கானதொரு சட்ட முன்வடிவு.

இந்தியக் குடியரசின் அறுபத்து எட்டாம் ஆண்டில் தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

**1.** (1) இந்தச் சட்டம், 2017ஆம் ஆண்டு தமிழ்நாடு பாரம்பரிய ஆணைய (திருத்தச்) சட்டம் என்று வழங்கப்பெறும்.

(2) இது, அரசு, அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

4 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் 24/2012.

**2.** 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு பாரம்பரிய ஆணையச் சட்டத்தில், 4 ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவில், (n) கூறு விட்டுவிடப்படுதல் வேண்டும்.

**நோக்க—காரண விளக்கவுரை**

2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு பாரம்பரிய ஆணையச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/2012) 4 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (m) கூறானது தொல்பொருள் ஆராய்ச்சி பற்றி அறிந்திருக்கும் நபர் ஒருவர் தமிழ்நாடு பாரம்பரிய ஆணையத்தில் உறுப்பினராக அரசால் நியமனம் செய்யப்படலாம் என்பதற்கு வகை செய்கிறது. மேற்சொன்ன சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (1) ஆம் உட்கூறின் (o) கூறானது பாரம்பரிய மேலாண்மை மற்றும் பண்பாடு விவகாரங்களில் ஈடுபாடுள்ள அரசு சாரா நிறுவனத்திலிருந்து ஒருவர் மேற்சொன்ன ஆணையத்தின் உறுப்பினராக அரசால் நியமனம் செய்யப்படலாம் என்பதற்கு வகை செய்கிறது. மேற்சொன்ன சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (n) கூறானது கலை மற்றும் பண்பாடு பாரம்பரியத்திற்கான இந்திய தேசிய பொறுப்புக்கட்டளையிலிருந்து ஒரு பிரதிநிதி மேற்படி ஆணையத்திற்கு உறுப்பினராக நியமனம் செய்யப்படலாம் என்பதற்கு வகைசெய்கிறது. தற்பொழுது, மேற்சொன்ன சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் மேலே கண்ட (m) மற்றும் (o) கூறுகளிலிருந்து உறுப்பினர்களை நியமனம் செய்வதானது, மேற்சொன்ன ஆணையத்தை அமைப்பதற்காக மேலும் கலை மற்றும் பண்பாடு பாரம்பரிய புலத்தையும் உள்ளடக்குவது பொருத்தமானதென கருதப்படுகிறது. எனவே, மேற்சொன்ன தமிழ்நாடு சட்டம் 24/2012 சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (n) கூறினை விட்டுவிடுவதென்று அரசு முடிவு செய்திருக்கிறது.

**2.** மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுப்பதற்கு, 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு பாரம்பரிய ஆணையச் சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் 24/2012) பொருந்தத்தக்க வகையில் திருத்தம் செய்வதற்கு அரசு முடிவு செய்திருக்கிறது.

**3.** இந்தச் சட்ட முன்வடிவு மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**க. பாண்டியராஜன்,**
*பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும்*
*இளைஞர் நலத் துறை அமைச்சர்.*

அ.மு.பி. ஜமாலுதீன்,
*செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.